Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி - 17 | 29-02-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை - 011

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
RV
பந்தல் சேவை,
(சி-8689) தர்மபுரம்.

## -புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் மக்கள்-

# வாக்களிப்பது தொடர்பான சில பிரேரணைகள்

# க.கு. தலைவரிடம் புலிகளால் முன்வைப்பு!

### ஹொவ்டேயுடனான சந்திப்புக்குறித்து சு.ப. தமிழ்ச் செல்வன்

(அலுவலக செய்தியாளர்)

**விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் வதியும் மக்கள் தேர்தலில் வாக்களிப்பது குறித்த நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக சில பிரேரணைகளை கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் நாங்கள் கையளித்துள்ளோம்.இவ்வாறு நேற்று அரசியல்துறை நடுவப் பணியகத்தில் இடம்பெற்ற கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொணட்புறூவ் ஹொவ்டேயுடனான சந்திப்பினையடுத்து அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் செய்தியாளர் களுக்கு பேச்சுவார்த்தை குறித்து தெரிவித்தார்.**

அவர் மேலும்தெரிவிக்கையில; நாங்கள் கண்காணிப்புக்குழுத் தலைவருடன் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளோம். முக்கியமாக யுத்தநிறுத்த உடன்பாட்டை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாகவும் விசேடமாக தேர்தல் காலத்தின் பொழுது எமது மக்கள் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் எமது மக்கள் தேர்தலில் வாக்களிப்பது குறித்த நடைமுறை ஒழுங்குகள் சம்பந்தமாக சில பிரேரணைகளை கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் நாங்கள் கையளித்துள்ளோம். இம் மக்களுக்கு சரியான முறையில்

(8ஆம் பக்கம் பார்க்க)



### 'வீடு' சின்னத்தில் கூட்டமைப்பு போட்டியிடுவதைத் தடை செய்ய கோரி விடுக்கப்பட்ட மனு நிராகரிப்பு

தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய "வீடு" சின்னத்தில் போட்டியிடுவதற்குத், தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையை சிறிலங்கா தேர்தல் ஆணையாளர் நிராகரித்துள்ளார்.

முன்னதாக லண்டனிலிருந்து கே. சின்னத்துரை என்பவர் தானே தமிழரசுக் கட்சியின் தலைவர் என்றும் தனது முன் அனுமதியின்றி தமிழ்க் கூட்டமைப்பினர் தமிழரசுக் கட்சியின் சின்னமாகிய "வீடு" சின்னத்தைப்

(8ஆம் பக்கம் பார்க்க)

### தேர்தல் கடமைகளில் ஊர்காவற் படையினர் ஈடுபடுவர்

#### சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது வடக்கு, கிழக்கில் ஊர்காவற்படையினரையும் பொலிசாருக்கு உதவியாகக் கடமையில் ஈடுபடுத்தப்போவதாக சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் இந்திராடிசில்வா தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழ் வேட்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில் ; ஊர்காவல் படையினர் அனைவருமே சிங்களவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தேர்தல் கடமைகளில் ஊர்காவற்படையினரை ஈடுபடுத்துவது பதற்ற நிலையை ஏற்படுத்தும் எனத் தெரிவித்துள்ளார்.

#### -அமெரிக்க தென்னாசியப் பிராந்திய-

### பிரதிச்செயலர் தொலைபேசி அழைப்பு சனாதிபதி சந்திரிகாவால் புறக்கணிப்பு

(கொழும்பு)

அமெரிக்க இராஜங்க செயலகத்தில் ஆசிய பிராந்தியத்துக்கான பிரதிச்செயலர் கிறிஸ்ரீனா றொக்கா கடந்தவாரம் சனாதிபதிக்கு பலமுறை தொலைபேசி அழைப்பு விடுத்தபோதும் சனாதிபதி அதற்கு உரிய பதில்அளிக்கவில்லை என தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் தேர்தல் உரியமுறையில் நடத்தப்படாது விட்டால் அதனால்வரும் விளைவுகளின் அடிப்படையில் வெளிநாட்டு உதவிகள் உடனடியாக ரத்துச் செய்யப்படும் என்ற எச்சரிக்கையை விடுப்பதற்காகவே பல தடவை சனாதிபதியுடன் தொடர்பு கொண்டதாகவும் இதற்கே சனாதிபதி உரிய பதில்

(8ஆம் பக்கம் பார்க்க)

### நிபந்தனையின்றி புலிகளுடன் பேச்சானால் திட்டங்களை ஐ.ம.சு.மு வெளியிட வேண்டும்

#### சிறிலங்காப் பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

நிபந்தனையின்றி தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுமானால் அது குறித்த திட்டங்களை நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை தான் கேட்டுக்கொள்வதாக சிறிலங்காப் பிரதமர் ரணில்விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் அரசியல் தீர்வொன்றைக் காணும் பொருட்டு ஐக்கிய இலங்கைக்குள் நிபந்தனைகளுடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறை ஒன்றைப் பெற்றுக் கொடுக்க தமது கட்சி முயற்சி எடுக்கும் என அவர் சுட்டிக் காட்டினார்.நிபந்தனையுடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்பது, மீண்டும் ஒரு யுத்தத்திற்கு செல்வதாக அமைந்துவிடும் எனவும் அவர் தெரிவித்தார். அவ்வாறு செயற்படும் போது சமாதான உடன்படிக்கை செயலற்றுப் போகும் எனவும் தெரிவித்தார். வரக்காப்பொலவில் நேற்று, மாலை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு, உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

### இந்திய மீனவரால் கொல்லப்பட்ட உள்ளூர் மீனவரின் சடலம் மீட்பு

(வல்வை)

கடந்த திங்கட்கிழமையன்று இந்திய மீனவர்களால் வெட்டிக்கொலை செய்யப்பட்ட பின்னர் கடலினுள் வீசப்பட்டிருந்த உள்ளூர் மீனவரது சடலம் நேற்றுக்காலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. மிக மோசமாகப் பழுதடைந்திருந்த நிலையில் சடலம் கரைக்கு ஏனைய மீனவர்களால் எடுத்துவரப்பட்டுள்ளது.

முன்னதாக, மீன்பிடித் தொழிலுக்கு சென்றிருந்த வல்வெட்டித்துறைப் பகுதி மீனவர்கள் கடலில் மேற்படி சடலத்தை அடை

(8ஆம் பக்கம் பார்க்க)

#### -புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மக்களுக்காக-

### திருமலையில் சூனியப் பிரதேசத்தில் கொத்தணி வாக்களிப்பு நிலையங்கள்

திருகோணமலை மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் தமிழ் வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியின் எல்லைப்புற இராணுவமுகாமுக்கு அண்மித்ததாக சூனியப்பிரதேசத்தில் கொத்தணி முறையில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக திருகோணமலை மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலரும் அரசாங்க அதிபருமான காமினி றொட்ரிக்கோ நேற்று தெரிவித்தார். இவ்வாறான கொத்தணி முறையிலான வாக்களிப்பு நிலையங்கள்

(8ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் குறித்து இந்தியா அச்சம் கொள்வதற்கு எதுவுமில்லை!

### இந்துஸ்தான் ரைம்ஸிற்கு தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

இந்தியா எமது போராட்டத்தைக் கண்டு அச்சமுறத் தேவையில்லை. ஏனெனில், இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தமிழகத்தில் தமிழ் மக்களின் நிலையிலிருந்து வேறுபட்டது. இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் இந்துஸ்தான் ரைம்ஸிற்கு கடந்த புதன் கிழமை வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தியா பல்லின பல குழு பல மொழிகளைப் பேசும் மக்களைக் கொண்ட நாடு.ஒவ்வொரு குழுவும் இந்தியன் என்ற அடையாளத்துடன் கௌரவத்துடன் உள்ளது. அவர்கள் தம்மிடையேயுள்ள வேறுபாடுகளை அதிகாரப் பகிர்வு மூலம் சீர்செய்து கொண்டுள்ளனர். எனவே, இலங்கைத் தமிழ் மக்களின் போராட்டம் தமிழ் நாட்டிலும் அதேநிலையை உருவாக்கிவிடும் என இந்தியா அஞ்சத் தேவையில்லை.

இலங்கைத் தமிழ் மக்கள் இந்தியாவை நட்பு நாடாகவும் மிகவும் சக்தி வாய்ந்த ஒன்றாகவுமே பார்க்கின்றனர். அதனுடன் தொப்புள் கொடி உறவு அவர்களுக்கு உள்ளது.

இலங்கைத் தமிழ் மக்கள் தமது இழந்துபோன உரிமைகளுக்காகவே போராடுகின்றனர் என்பதை இந்தியாவுக்குக் கூறவிரும்புகின்றோம். அவர்கள் இலங்கையில் சம உரிமையுடன் வாழவே முயற்சி செய்கின்றனர். வடக்கு-கிழக்கில் எமது சொந்தத் தாயகத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நாங்கள் வாழ்ந்து வருகின்றோம். எவர் மீதும் அதிகாரம் செலுத்தும் எண்ணமோ மேலாதிக்கம் செலுத்தும் எண்ணமோ எமக்கில்லை. நாம் அமைதியாகவும் கௌரவத்துடனும் வாழக்கூடிய நிலை வருமானால் அதனை கவனத்தில் எடுப்போம்.

இந்தியா தமிழர் தேசத்தையும் சிங்கள

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**லொறி விற்பனைக்குண்டு**

டாட்டா மொடல் நம்பர் 1109 கண்டா நம்பர் WPHK 20 அரநீ உள்ள பொடி அடித்துள்ளது விற் பனைக்கு உண்டு. தொடர்பு இல. 470, 6ஆம் யூனிற், இராமநாதபுரம். (4265)

**அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்**

கண் பரிசோதித்து நவீன பிறேம்களில் கண்ணாடி வழங்குதல் பல் கட்டுதல் மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போடுதல் என்பன உடன் செய்து கொடுக் கப்படும். தொடர்புக்கு அமல் பல் மூக்குக் கண்ணாடியகம், பரந்தன் சாலை, புதுக்குடியிருப்பு.(3994)


# அக்கராயன் அ.த.க.வின் இல்ல மெய்வன்மை போட்டி

கிளிநொச்சி அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுப் போட்டிகள் பாடசாலை அதிபர் ஆ.கருணாநிதி தலைமையில் கடந்தபுதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சாள்ஸ் அன்ரனி படையணியின் மருத்துவப்பிரிவு பொறுப்பாளர் க.மிரேஸ் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடி யினை அதிபர் ஆ.கருணாநிதி ஏற்றினார்.

பிரதம விருந்தினர் வி.சிற்றம்பலம் வெற்றி பெற்ற இல்லங்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

முல்லை இல்லம் முதலாம் இடத்தையும் குறிஞ்சி இல்லம் இரண்டாம் இடத்தையும் மருதம் இல்லம் மூன்றாம் இடத்தையும் பெற்றன.

# கிளி. கிராமிய அபிவிருத்தி வங்கி நாச்சிக்குடாவில் கடன் வழங்கல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளிநொச்சிக் கிளை முழங்காவில் பிரதேசத்தில் நாச்சிக்குடா கிராமத்தில் பதினொரு முஸ்லிம் வழமைதாரருக்கு ஆறு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவினை அவர்களின் சுயமுயற்சியை ஊக்குவிப்பதற்காக சுழற்சி முறைக் கடனாக கடந்த வெள்ளி வழங்கியுள்ளது.

இக்கடன் வழங்கல் நிகழ்வை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் து.குகன் ஆரம்பித்து வைத்தார். இவர்களுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிளி. மாவட்ட பொறுப்பாளர் மு. செந்தில், அரசியல்துறை முழங்காவில் பிரதேசப் பொறுப்பாளர் ஜெயாநந்தன், கிராமிய அபிவிருத்தி வங்கிப் பணிப்பாளர் ப. சுஜன், கிராமிய அபிவிருத்தி வங்கி கிளிநொச்சிக் கிளை மேலாளர் க. கௌரிசங்கர், த. பொ. மே. நிறுவன முழங்காவில் பிரதேச இணைப்பாளர் சதீஸ்குமார் மற்றும் சமூக அபிவிருத்திச் சங்க முஸ்லிம் மக்களும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.


## பணிநிலை வேண்டுகை

விசுவமடு பிரதேசத்தில் இயங்குகின்ற நிறுவனமொன்றுக்கு கீழ் குறிப்பிட்ட பணிநிலைக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர். தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கவும்.

**ஒப்புநோக்குனர்/தட்டச்சாளர் (பெண்கள்)**

**தகைமைகள்:- 0/L பரீட்சையில் தமிழில் திறமைச்சித்தி**

**சம்பளம்:- திறமைக்கேற்ப பேசித் தீர்மானிக்கப்படும்**

**விண்ணப்பமுடிவுத்திகதி:- 10/03/2004**

**அனுப்பவேண்டிய முகவரி:-**

**விளம்பர இல:- 10**
**மே/பா.ஈழநாதம்**
**புதுக்குடியிருப்பு பணிமனை.**

(3998)


# 600 குடும்பநல உத்தியோகத்தர்களை திரட்ட விரைவில் விண்ணப்பம் கோரல்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் குடும்பநல உத்தியோகத்தர்களுக்கு (மருத்துவமாதர்) நிலவும் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமுகமாக சுமார் 600பேரை திரட்டி பயிற்றுவிப்பதற்கான அங்கீகாரம் அமைச்சரவையால் பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பே வழங்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. விரைவில் மருத்துவ மாதர் (குடும்பநல உத்தியோகத்தர்கள்)ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பான விண்ணப்பங்கள் கோரப்பட்டவுள்ளன.

ஜி.சி.ஈ.சாதாரணசித்தி பெற்ற பெண்களிடமிருந்தே இவ்விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன என்றும் இந்த ஒருமுறை மாத்திரமே ஜி.சி.ஈ. சாதாரணசித்தி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஜி.சி.ஈ.சாதாரண தரத்தில் தாய்மொழியுடன் அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் இன்னும் ஒரு பாடத்தில்திறமைச்சித்தி ஒரு தடவையில் அல்லது ஐந்து பாடங்களுக்குக் குறையாதவாறு இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் ஜி.சி.ஈ.சா/தரம் சித்தியடைந்திருக்கவேண்டும். விண்ணப்பங்களைக் கோரும் அறிவிப்பு சுகாதார அமைச்சினால் விரைவில் வெளியிடப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது. (25)

# புனித பூமி சிறுவர் நலன் காப்பகத்தில் தொழிற்பயிற்சி நெறி ஆரம்பம்

(ஒட்டுசுட்டான்)

தொழில் வாய்ப்பு இன்றி இருக்கும் இளைஞர்களுக்கு சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாகவும் வேலைகளை துரிதப்படுத்தவும் தச்சுவேலை, மின்ஒட்டு ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

உலக கனேடிய பல்கலைக் கழக (யூஸ்) நிறுவனமும் கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து நடாத்தும் இவ் தொழிற்பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு புனிதபூமி சிறுவர் நலன்காப்பகத்தில் கடந்த புதன்கிழமை காலை 11.00மணியளவில் கிராமிய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் ஏ.வீ.கே.மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது.

இதில் கருத்துரைகளை முத்து விநாயகபுரம் கிராம சேவையாளர் சோமசுந்தரம், சிறுவர் நல பாதுகாப்பு நிறுவனத்தைச் சேர்ந்த சுதாஸ்கரன், உலக கனேடிய பல் கலைக்கழக நிறுவனத்தின் திட்ட இணைப்பாளர் ஜீவன் ஆகியோர் வழங்கினர்.

இதில் தச்சு வேலைக்கு 25மாணவர்களும் மின்ஒட்டு வேலைக்கு 25மாணவர்களும் சேர்ந்துள்ளனர். இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு பணம் மாதாந்தமும் பயிற்சி முடிவில் தொழிலுக்கான உபகரணங்களும், பயிற்சிக்காலத்தில் ஒவ்வொரு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படவுள்ளதாக கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

எனவே இதில் பயிற்சிபெற விரும்பும் மாணவர்கள் உடனடியாக இப்பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள் ளப்படுகின்றனர். (05)

## வீதிகள் புனரமைப்பு

(திருவையாறு)

திருவையாறு 1ஆம் 2ஆம் 3ஆம் பகுதி வீதிகளும் அம்பாள்நகர் வீதிகளும், நீர்ப்பாசன கால்வாய்களும் வேல்ட் விசன் நிறுவனத்தால் உலக உணவுத்திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டுவருகிறது.

20 கி.மீ. நீளமுடைய 19 வீதிகளும் 25 ஏக்கர் நீர்ப்பாசன கால்வாய்களுமே இப்பகுதியில் புனரமைக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (15)

## இயக்கச்சி பொதுச்சந்தை இயங்குவதற்கு நடவடிக்கை

(வடமராட்சி)

கடந்த 13ஆண்டுகளின் பின் முள்ளிப்பற்று இயக்கச்சி பொதுச் சந்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நடவடிக்கையினை மேற்கொண்டுவருகின்றது. அதன்படி தற்போது சந்தைக்கான கொட்டகை அமைத்து அதன் புனரமைப்புப் பணிகள் முற்றாக முடிவடையும் நிலையில் உள்ளது என்றும், அது முடிவடைந்தவுடன் அது திறந்து மக்களின் பாவனைக்கு விடப்படும் என்றும் இதனால் பெரும் நன்மைகள் அடைவார்கள் முள்ளிப்பற்று மக்கள் என்றும் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை செயலாளர் [illegible] (11)


## துணுக்காய் பிரதேச சபை

## அறிவித்தல்

எமது பகுதியில் புதிதாகக் கட்டப்படும் அனைத்து கட்டடங்களும் எமது சபையின் கட்டட அனுமதிப்பத்திரம் பெற்று அதில் கேட்கப்பட்ட தரவுகளைப் பூர்த்திசெய்து எம்மிடம்சமர்ப்பித்து எமது சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்பே கட்டப்படல் வேண்டும். இவ் அனுமதியை பெறாத கட்டடங்கள் அனைத்தும் நாடு நகர அபிவிருத் திச் சட்டத்தின் கீழ் அனுமதியற்ற கட்டடங்களாகவே கருதப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு.கு.விக்ரர் ஜெயசிங்கம்,**
**விசேட ஆணையாளர்,**
**பிரதேசசபை,**
**துணுக்காய்.**

(சி 9307)



வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்த

சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபத்தினரின் புதியதோர் அறிமுகம்

கொழும்பு விலைக்கே வன்னியில்!

உமஸாக்கி ஜூடோ 125CC

உமஸாக்கி FD100-6B

மூன்று சுத்திகரிப்பு இலவசம். 10,000 km க்கு உத்தரவாதம்

# சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

இல. 496,496/1 நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)







(சி-9259)

# கெயிட்டியின் கிளர்ச்சியை முடிவுறுத்த சமரச முயற்சியில் பிரான்ஸ் அரசு

(லண்டன்)


**கெயிட்டியின் கிளர்ச்சியை முடிவிற்குக் கொண்டுவரும் முயற்சியாக பிரான்சு வெளிவிவகார அமைச்சர் டொமினிக் டீ விலீபன் தலைமையிலான குழு கெயிட்டி அரசகுழுவொன்றைச் சந்தித்து நேற்றுமுன் தினம்முதல் பேச்சுவார்த்தை நடத்திவருகிறது.**

கெயிட்டியை குடியேற்ற நாடாகக் கொண்டிருந்த பிரான்ஸ் அந்த நாட்டின் பிரச்சினையில் சமரசம் செய்ய முன் வந்துள்ளமையை கெயிட்டியின் எதிர்க்கட்சியினர் வரவேற்றுள்ளனர்.

கெயிட்டியின் சனாதிபதி ஜீன் பிரைண்ட் அரிஸ்டைட் பதவி விலக வேண்டும் எனக்கோரும் கிளர்ச் சியாளர்கள் கெயிட்டியின் தலைநகர்த் துறைமுகமான பிரின்ஸ் இற்கு முன்னேறி வரும் இவ் வேளையில் பிரான்ஸ் அமெரிக்கா மற்றும் சர்வதேச நாடுகள் ஆகியன சமரசத்தை உண்டு பண்ணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

இதேவேளை கெயிட்டியில் சனாதிபதி அரிஸ்டைட்டின் ஆதரவாளர்களுக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமான போர் உச்சக்கட்டத்தை அடைந்ததை அடுத்து அமெரிக்கா அங்குள்ள மேலதிக உத்தியோகத்தர்களையும் குடும்பத்தினரையும் நாட்டிற்குத் திருப்பி அழைத்துள்ளது. இதனையடுத்து நேற்று முன்தினம் முதல் கெயிட்டியில் உள்ள அமெரிக்கப் பிரஜைகளான மேலதிக உத்தியோகத்தர்களும் அவர்களது குடும்பத்தினரும் அமெரிக்காவிற்கு திரும்பத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை இதுவரை தொண்ணூறு அமெரிக்கக் குடும்பங்கள் கெயிட்டியில் இருந்து அமெரிக்காவிற்குத் திரும்பியுள்ளன. அமெரிக்கா மட்டுமன்றி பல்வேறு உலக நிறுவனங் களும் செயிட்டியில் இருந்து மேலதிக உத்தியோகத்தர்களையும் குடும்பத்தினரையும் தத்தமது நாடுகளுககுத் திருப்பி அழைத்து வருகின்றன.




விலங்குகளை உணவுக்காக பயன்படுத்துவோருக்கெதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவோர்க்கு ஆதரவாக பாங்கொக்கில் உள்ள கேணல் சான்டர்ஸின் சிலைக்கு முகமூடியணிவிக்கும் அமெரிக்கப்பாடகி கிறிஸ்ஸி ஹைன்டி.

# செப்.11 தாக்குதல் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கும் கால எல்லை மேலும் நீடிப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் மீது செப்ரெம்பர் 11இல் இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து விசாரணைகள் மேற்கொண்டுவரும் ஆணைக்குழு அதன் அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை மேலும் நீடித்துள்ளது.



விண்வெளியில் ஆய்வு நடத்தும் நாடுகள் வரிசையில் சென்ற வருடம் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ள சீனாவின் விண்வெளிநிலையத்தின் தோற்றம்.

மேற்படி விசாரணை மேற்கொண்டுவரும் ஆணைக்குழுவின் இந்தக் கால எல்லை நீடிப்பை அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைப் பேச்சாளர் டெனிஸ் முதலில் நிராகரித்திருந்தார்.

டெனிஸ் தனது நிராகரிப்பை நேற்று முன்தினம் விலக்கிக் கொண்டதை அடுத்து ஆணைக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிப்பதற்கான கால எல்லையை இரண்டு மாதங்களால் நீடித்துள்ளது.

கால நீடிப்போடு ஆணைக்குழுவின் செலவீட்டிற்காக ஒரு மில்லியன் டொலர் நிதியும் வழங்கப்பட்டிருக்கின்றது.

# கொஸ்டாரிக்காவில் மீண்டும் சனாதிபதியாக ஒஸ்கா ஆரியஸ் விருப்பம்

(கொழும்பு)

கொஸ்டாரிக்காவில் சனாதிபதியாக பதவி ஏற்ற ஒருவர் எட்டு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் சனாதிபதி பதவிக்குப் போட்டியிடலாம் என்று அறிவிக்கப்பட்டதை அடுத்து முன்னாள் சனாதிபதி ஒஸ்கா ஆரியஸ் தான் மீண்டும் சனாதிபதியாக வர விருப்பம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் சனாதிபதியான ஒஸ்கா ஆரியஸ் 1986 ஆம் ஆண்டு முதல் 96 ஆம் ஆண்டு வரை சனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் கொஸ்டாரிக்கா பொருளாதார வளர்ச்சியில் உச்சம் பெற்று விளங்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை தற்போதைய கொஸ்டாரிக்கா பாரிய பொருளாதார சிக்கல்களுக்கு உள்ளாகி உள்ளது.

[illegible]னாதிபதியாக பதவி வகித்த ஒருவர் மீண்டும் போட்டியிடமுடியாது என்ற 1969 ஆம் ஆண்டுச் சட்டம் நீக்கப்பட்டுள்ளதை அடுத்து சனாதிபதி தெரிவிற்கு தாம் தயாராக இருப்பதாகவும் அதற்கான அனுமதியை மக்கள் தருவார்களேயானால் கொஸ்டாரிக்காவின் சனாதிபதியாக செயற்பட தான் தயாராக உள்ளதாகவும் அவர் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

## வெடி விபத்தில் ரஷ்யாவில்18 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யாவின் சைபீரிய பிராந்தியத்திலுள்ள உணவுச் சாலையில் இடம்பெற்ற வாயு வெடிவிபத்தில் 18 பேர் உடல் கருகிப் பலியாகியுள்ளனர்.

சமயல் வாயு சிலிண்டர்கள் நான்கு வெடித்துச் சிதறியதால் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இதில் 18 பேர் காயமடைந்துள்ளனர்.

# தினசரி நீதிமன்றிற்கு சமுகமளிப்பதிலிருந்து விலக்களிக்குமாறு வைகோ விண்ணப்பம்

**-மார்ச் 3 இல் தீர்ப்பு வழங்கப்படுமென நீதிபதி பதில்**

(சென்னை)

இந்திய நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்துக்குச் செல்வதற்காக தினசரி நீதிமன்றத்துக்கு வருவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்று கூறி ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு எதிர்வரும் மார்ச் மூன்றாம் திகதி வழங்கப்படும் என்று பொடோ நீதிமன்றம் அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தமது கட்சி உறுப்பினர்களுக்காகவும் கூட்டணியில் வேட்பாளர்களுக்காகவும் பிரசாரம் செய்ய வேண்டியிருப்பதால் தினசரி நீதிமன்றத்தில் ஆஜராகுவதில் இருந்து விலக்கு அளிக்க வேண்டும் என்றும், அதேசமயம் நீதிமன்ற அலுவலுக்கு எவ்வித இடையூறுமின்றி அவர் தரப்புச் சட்டத்தரணிகள் தினமும் ஆஜராவார்கள் என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை கடந்த வியாழக்கிழமை நடந்த போது அரசு தரப்பு வழக்கறிஞர் குற்றத்தின் தன்மையைக் கருத்திற்கொண்டு வைகோவுக்கு அனுமதி வழங்கக் கூடாது என்று வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட பொடோ நீதிபதி எதிர்வரும் மார்ச் மாதம் தீர்ப்பு அளிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

# வால்வெள்ளிக்கு விண்கலம் அனுப்பும் பணியில் மீண்டும் தாமதம்


வால்வெள்ளி ஒன்றில் இறங்கவுள்ளரொசெட்டா விண்கலத்தின் பயணம் இரண்டாவது தடவையாகவும் நிறுத்தப்பட்டுள்ளது.

வியாழக்கிழமை பிரன்சுகயானாவிலிருந்து இக்கலம் புறப்படுவதாக தீர்மானிக்கப்பட்டிருந்தது காலநிலையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் எரிசக்தி வழங்கும் தாங்கியில் சிறு தவறு காணப்பட்டதாலுமே இதன் பயணம் தடைப்பட்டுள்ளது.

விண்கலம் ரொசெட்டா ஆர்யுமோவ் கெரசி மென்கோ எனப்படும் வால்வெள்ளியை 2014 இல் அடையும் என்று திட்டமிடப்பட்டுள்ளது.

தடைப்பட்ட இந்த விண் கலத்தை மார்ச் மாதம் 17ஆம் திகதி வரை வால்வெள்ளிக்கு அனுப்பும் முயற்சிகள் தொடரலாமென்றும் அந்தக் திகதிக்குப் பின்னர் பூமியின் சுழற்சியில் ஏற்படும் மாற்றத்தினால் ரொசெட்டா கலத்திற்கு தேவைப்படும் எரிசக்திச் செலவு அதிகரிக்கலாமென்றும், இத்திட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் வால்வெள்ளிக்குச் செல்லவுள்ள துணைக்கலம் ரொசெட்டா பூமியிலிருந்து புறப்பட்ட 4 மணித்தியாலங்களின் பின்னர் பிரிந்து தனது வால் வெள்ளிக்கான பயணத்தை ஆரம்பிக்கும். 10ஆண்டுகள் தொடரும் பயணத்தின் பின்னர் வால் வெள்ளியை 2014 மே அல்லது யூன் மாதத்தில் அடையலாமென்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. தனதுபயண காலப்பகுதியில் பூமியை நான்கு முறை இது சுற்றி வரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



14 ஆவது உலகக் கிண்ண சுழியோடும் இறுதிப்போட்டியில் கலந்துகொள்ளும் கனடாவின் அலக்ஸாண்டர் டெஸ்பெட்டி பிலிப்பி கொன்ரைஸ் இணை.

# உலக கோடீஸ்வரர் பட்டியலில் பில்கேட்ஸ் இம்முறையும் முதலிடத்தில்

உலக கோடீஸ்வரர் பட்டியலில் பில்கேட்ஸ் முதலிடத்திலுள்ளார். இவர் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக இம்முறையும் முதலிடத்திலுள்ளார்.

மைக்ரோ சொவ்ட் கணினி நிறுவன உரிமையாளரான பில் கேட்ஸின் சொத்துமதிப்பு இலங்கை ரூபாவில் 9ஆயிரத்து 340 கோடி ஆகும்.

கடந்த ஆண்டு இவரது சொத்து மதிப்பு 8ஆயிரத்து 140 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு ஆயிரத்து 200 கோடி யால் அதிகரித்துள்ளது.

உலக கோடீஸ்வரர்கள் எண்ணிக்கை இம்முறை 587 ஆக உயர்ந்துள்ளது.

இந்த வரிசையில் ஒன்பது பேர் இந்தியர்களும், தமிழரான சிவநாடார் 360 கோடி ரூபா சொத்துமதிப்புடன் 310 ஆவது இடத்திலுமுள்ளார்.

# 3000 குண்டுகளை அழித்துவிட லிபியா தீர்மானம்

(திரிப்போலி)

இரசாயன வெடிபொருட்கள் நிரப்பப்படாத 3000 இற்கும் மேற்பட்ட குண்டுகளை லிபியா அழித்துவிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்பான கோக்கின் மேற்பார்வையிலேயே மார்ச் மாதம் ஐந்தாம் திகதிவரை இந் தக் குண்டுகளை அழித்துவிடு வதற்கான செயற்பாடுகளை லிபியா தொடருமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் லிபியா முற்றாகவே இரசாயன ஆயுதங்களின் பாவனைகளை நிறுத்தியுள்ளது. என்றும் அறிவிக்கப்படவுள்ளது.

1993 சனவரி மாதம் இரசாயன ஆயுதங்களை அழிப்பது தொடர்பான முதலாவது மாநாடு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 160 நாடுகள் இந்த அமைப்பில் இணைந்துள்ளன.

# காஷ்மீர் விவகாரத்துக்குத் தீர்வு எட்டப்படாத வரை இந்திய-பாக்கிஸ்தான் சமாதானம் என்பது....?

அ.கலைவாணி

இந்தியாவும் பாகிஸ்தானும் சமாதானத்தை அடைவதற்கான வழிவகைகளுக்கு அடிகோலி வருகின்றன. இதுவரை அணுவாயுதங்களைக் கொண்ட இருநாடுகளும் முறுக்கிக்கொண்ட நிலையை கைவிட்டுள்ளன. சமாதானம் பற்றிப் யோசிக்கவும் அதுபற்றி பேசவும் முன்வந்துள்ளன.

அந்தவகையில் இதுவரை இருநாடுகளிடையேயும் நிலவிவந்த ஆயுத யுத்தம் மௌனயுத்தம் எல்லாவற்றுக்குமே முற்றுப் புள்ளியிடுவதற்கு இருநாடுகளும் இறங்கி வந்துள்ளன.

இதனை எடுத்துக்காட்டும் வகையில் தான் இருநாடுகளும் உறவுகள் என்னும் புதிய அத்தியாயத்தை எழுதவுள்ளன. இதன் முதல் அத்தியாயமாக, கடந்த வாரம் இஸ்லாமாபாத்தில் இந்திய-பாகிஸ்தான் வெளியுறவு இணைச்செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தப்பட்டிருக்கிறது.

அவை சுமுகமாகவே முடிவடைந்துள்ளன. இதை அடுத்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இருநாட்டினதும் வெளியுறவுச் செயலர்கள் மட்டப்பேச்சுவார்த்தை நடத்தத்தீர்மானம் கூட எடுக்கப்பட்டிருக்கின்றது.

அந்த வகையில், காஷ்மீர் பகுதியே வெடிகுண்டுகளின் அதிர்விலிருந்து அமைதி கொள்ளப் போகின்றது. இந்தியா தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஜம்மு-காஷ்மீர் பகுதி மக்களும் பாகிஸ்தான் தனது பிடிக்குள் வைத்திருக்கும் அசாத்-காஷ்மீர் பகுதி மக்களும் சகோதரத்துவத்தை எட்ட முடியும் என்று நம்பப்படுகின்றது.

ஏனெனில் அந்த வகையில் தான் இஸ்லாமாபாத்தில் வெளியுறவு இணைச் செயலர்களின் பேச்சுவார்த்தையின் இணக்கப்பாடு எடுத்துரைக்கின்றது.

அமைதி, பாதுகாப்பு காஷ்மீர், ஷியாட்சின், பயங்கரவாதம், போதைப்பொருள் கடத்தல், பொருளாதாரம், வர்த்தகம், நட்புப்பரிமாறல் என்பன இருநாட்டு வெளியுறவு இணைச செயலாளர்கள் மட்டத்தில் பேசப்பட்ட விடயங்களாகும்.

இந்த விடயங்களை உள்ளடக்கி இருநாடுகளும் பரஸ்பரம் நம்பிக்கையை கட்டியெழுப்பும் யோசனைகள் பற்றிய பேச்சுவார்த்தைகளுக்கு திகதிகளை நிர்ணயித்துள்ளன.

ஏற்கனவே புதுடில்லி- லாகூர் பேருந்துச் சேவை, புகையிரதச்சேவை இருநாடுகளிடையேயும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவற்றுடன் பிளவுபட்டு காணப்படும் காஷ்மீரின் இருபகுதிகளையும் மீண்டும் இணைக்கும் நோக்குடன் அதற்கான பேருந்துச் சேவை ஆரம்பமாகவுள்ளது?


இதற்கான பேச்சுவார்த்தையினை இருநாடுகளின் வெளியுறவு இணைச் செயலர்கள் மார்ச் மாத முற்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளார்கள் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று பாகிஸ்தானின் சிந்து மாநிலத்துக்கும் இந்தியாவின் இராஜஸ்தான் மாநிலத்துக்கும் இடையிலான போக்குவரத்துச் சேவைகளும் ஆரம்பிக்கப்படலாம். இதற்கான கலந்துரையாடலும் மார்ச் பிற்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

ஆரம்பத்தில் வெளியுறவு இணைச் செயலர்கள் மட்டப்பேச்சுக்கள் இரண்டும் வெற்றியளிக்குமானால் படிப்படியாக இருநாட்டு எல்லைப்பாதுகாப்பு அதிகாரிகளும் கூட பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளார்கள்.

அந்த வகையில் ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் என்பன தொடர்பாக இருநாட்டு எல்லைப்பாதுகாப்புஅதிகாரிகள் மட்டப் பேச்சுக்கள் ஏப்ரலில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த மூன்று பேச்சுவார்த்தைகளும் இருநாட்டுக்கும் நன்மைகளை ஏற்படுத்துமானால்... அடுத்த கட்டப்பேச்சாக இருநாட்டு வெளிவிவகார அமைச்சர்கள் கலந்து கொள்ளும் உயர்மட்டப் பேச்சாக ஆகஸ்ட் மாதத்தில் நடத்தப்படவுள்ளது.



இந்த நிகழ்ச்சி நிரலுக்கு இரு நாடுகளும் "சமாதானப்பாதை வரைபடம்" என்று பெயர் சூட்டியுள்ளன.

பெயரைப்பார்க்கையில் அழகாகத்தான் இருக்கின்றது. ஆனால் இந்த சமாதானப்பாதை, வரைபடத்துடன் மட்டுமே நின்று விடுமா... அல்லது அந்த சமாதானப்பாதையில் இருநாடுகளுமே நடக்க முனையுமா...

ஏனெனில் கடந்த பல வருடகாலங்களாக ஸ்தம்பிதம் அடைந்துள்ள இருநாட்டு உறவுகளும் சிக்கல்களில் இருந்து மீள வேண்டும். அப்போதுதான் பேச்சுவார்த்தைகள் படிப்படியாக முன்னேற இடமுண்டு. இல்லையேல் மார்ச் முற்பகுதியுடன் கூட இரு நாடுகளின் சமாதானம் கேள்விக்குறியாகிக் கூடப்போகலாம்..?

இதற்கு இருநாடுகளும் என்ன செய்யவேண்டும்...? இருநாடுகளும் விட்டுக் கொடுப்புடனும், சகிப்புத்தன்மையுடனும் நடந்து கொள்ள வேண்டுமென்பது அவதானிகளின் கருத்து.

அந்த வகையில் ஜம்முகாஷ்மீர் அசாத் காஷ்மீரைப் பிரிக்கும் எல்லைக்கட்டுப்பாட்டுக் கோட்டில், இருநாடுகளும் போர் நிறுத்தத்தை கடைப் பிடிப்பது வரவேற்பை பெற்றிருக்கின்றன.

முக்கியமாக காஷ்மீர் மக்கள் இதனால் நன்மையடைவார்கள். கிளர்ச்சியாளர்கள், பிரிவினைவாதிகளுக்கிடையிலும், படையினருக்குமிடையிலும் சண்டைகள் ஏற்படும் போதெல்லாம் அதிகமான பாதிப்புக்களை அனுபவித்துள்ளவர்கள் அவர்கள் தான். அதன் வடுக்களை சுமந்துகொண்டிருப்பதும் அவர்கள் தான். அதனால் இந்தப்போர் நிறுத்தம் காஷ்மீர் மக்களைப் பொறுத்தவரை அரியதோர் சாத்தியக்கூறு ஆகும்.

அதனால் தான் எல்லைக்கட்டுப்பாட்டு கோட்டின் அருகில் உள்ள பாதிப்படைந்த பாடசாலைகள் புனரமைக்கப்படுகின்றது, மக்கள் குடியமர ஆரம்பித்துள்ளார்கள். இது இருநாடுகளிடையே சமாதானம் மலரும் எனும் அம்மக்களின் நம்பிக்கையையே எடுத்துக்காட்டுகின்றது.




அதுமட்டுமன்றி கடந்த 14 வருடங்களாக இருநாடுகளிடையேயான விளையாட்டுக்கள் அனைத்துமே அறுபட்ட நிலையிலேயே இருந்தன.

ஆனால் தற்போது இந்திய கிரிக்கெட் அணி எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தான் சென்று விளையாடவுள்ளது. இதற்கு இந்திய மத்திய அரசு அனுமதியும் வழங்கியுள்ளது.

இது நல்லதொரு திருப்பம் என்றே வர்ணிக்கவேண்டும். 'சமாதானம்' என்பது பேச்சுக்களுடன் மட்டும் தங்கிவிடாது. இந்திய அணி அங்கு விளையாடச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது என்பது இருநாட்டு உறவுகளுக்கு மேலும் வலுவூட்டும் சக்தி என்றே நம்பலாம்.

இதேவேளை பாகிஸ்தானும் இந்திய அணி விளையாட வருவதை வரவேற்கின்றது. இடையூறுகளுக்கோ சாத்தியமில்லை என்று உத்தரவாதமும் அளித்திருக்கிறது. இதுவும் இருநாடுகளின் சமாதான முயற்சிக்கு கிடைத்த உந்துசக்தி என்றே நம்பத் தோன்றுகின்றது.

இதேவேளை பாகிஸ்தானில் அணுவாயுத விஞ்ஞானி அப்துல் காதிர்கானின் அணுவாயுத தொழில் நுட்பங்களை ஏனைய நாடுகளுக்கு விற்றதான சர்ச்சையும் அதில் சனாதிபதி முஷாரப்பிற்கு பங்குண்டு எனும் விவகாரமும் ஏனைய நாடுகளால் விமர்சிக்கப்படுகின்றது.

ஆனால் இந்தியா இந்த விடயம் பற்றி இதுவரை உத்தியோக பூர்வமாக எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை.

அதேபோல் பாகிஸ்தான் அணுவாயுத திட்டங்களை முன்னெடுக்கும், விட்டுக்கொடுப்பது என்பது சாத்தியமற்றது என்று சனாதிபதி முஷாரப் அறிவிப்பு செய்திருந்தார்.

இந்த அறிவிப்பு இந்தியா பாகிஸ்தான் இடையேயான சமாதான முயற்சிக்கு தடைக்கல்லாக அமையலாம் என்று பரபரப்பாக எதிர்வுகூறப்பட்டது. ஆனால் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் முதல் எவருமே இதுவரை முஷாரப்பின் அறிவிப்பு பற்றி சர்ச்சை எதுவுமே கிளப்பவில்லை.

இத்தகைய இந்தியாவினுடைய நடவடிக்கை சகிப்புத் தன்மையையும், விட்டு கொடுப்பையுமா.... எடுத்துரைக்கின்றது என்று வியக்கும் அதேவேளை,

இந்தியாவில் பாராளுமன்ற தேர்தல் நெருங்கி வரும் இந்தவேளையில் பாகிஸ்தானுடன் முரண்பட்டுக்கொண்டிருப்பது தேவையற்றது.தேர்தலின் வெற்றி தோல்வி முடிவு செய்யப்பட்ட பின்னர் இதுபற்றி யோசிக்கலாம்..... எனும்வாஜ்பாயின் தேர்தல் வியூகமாக கூட ஏன் இருக்கக் கூடாது...? என்றும் வினா எழுப்ப முடியும்.

ஏனெனில் பிரதமர் வாஜ்பாயின் சாதனைகளை முதன்மைப்படுத்தியே பாரதிய சனதாக் கட்சி தீவீரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகிறது.

அதனால் அந்த சாதனைகளுள் பாகிஸ்தானுடைய சமாதான முயற்சிகளும் பெரும் பங்கு வகிக்கின்றன.எனவே பாகிஸ்தான் சனாதிபதியின் சர்ச்சைகளுக்கு எதிராக அறிக்கை விடுவது என்பது பாரதிய ஜனதாக் கட்சியின் பிரச்சாரத்தை நிச்சயமாக பாதிப்படைய வைக்கும்.

ஏனெனில் ஜம்மு-காஷ்மீரிலும் தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு காங்கிரஸ் மக்கள் சனநாக கட்சியுடன் சேர்ந்து போட்டியிடவுள்ளது.

அதனால் ஜம்மு-காஷ்மீரில் பாரதிய ஜனதா கட்சி வெற்றி பெறுவதானால் வாஜ்பாய்க்கு கைகொடுக்கப்போவது சமாதான முயற்சிகளும் அங்கு கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தமுமேயன்றி வேறொன்றில்லை.

அதே நேரம் இந்தியப் பாராளு மன்றத் தேர்தலின் முடிவுகளே சமாதானத்தை முன்னெடுப்பது பற்றித் தீர்மானிக்கவும் போகின்றன.

அதேவேளை மார்ச் முற்பகுதியில் ஆரம்பமாகும் பேச்சுவார்த்தைகள் உடைந்து போகாமல்,முறிந்து போகாமல் முன்னேறவேண்டும். அதற்கு இரு நாடுகளும் விட்டுக்கொடுத்து முன்னேறவேண்டும்.

ஆனால் அஸாத்-காஷ்மீரை பாகிஸ்தான் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதில் கிளர்ச்சியாளர்கள் வலியுறுத்தி வருகிறார்கள். அதேபோல் ஜம்மு-காஷ்மீரை இந்தியாவும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று மறுபக்கமும் வலியுறுத்தப்படுகின்றது.

எனவே இருநாட்டுத் தலைவர்கள் எடுக்கும் சமாதான முயற்சிகள் எந்தளவிற்கு சாத்தியப்படும் என்பது மாபெரும் வினா. ஏனெனில் முஷாரப் மூன்றாவது தடவையாகவும் கொலை முயற்சியில் இருந்து மீண்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

எனவே காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாது இந்தியாவும் பாகிஸ்தான் எத்தனை சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தியும் பயனிருக்கப் போவதில்லை.

மறுபுறம் காஷ்மீரை விட்டு ஏனைய சிக்கல்களுக்கு தீர்வு கண்டாலும் கூட, காஷ்மீர் பிரச்சினை பேசப்படும்போது அது உடையுமானால் ஆரம்பம் முதலே சறுக்கல் ஆகி விடும். மீண்டும் சமாதானம் காணாமல் போய்விடும்.

எனவே காஷ்மீருக்கு தீர்வு எட்டாத வரை இரு நாடுகளும் புகையிரதம் முதல் போக்குவரத்து விளையாட்டு வரை ஏற்படுத்திக் கொண்டாலும் அவை ஒரு மாதத்திலோ மறுமாதத்திலோ மீண்டும் பிளவுபடும் சாத்தியமும் அதிகம் உண்டு.

இதனால் காஷ்மீர் பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வு எட்டப்படப்போகின்றது...? இதுவே இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஆட்டிப்படைக்கும் முக்கிய வினாவாகும்.

# தேசிய லொத்தர் சபை சுவிகரிப்பு தேர்தல் நிதி பெறுவதற்காகவே!

## ஐ.தே.கட்சி பிரதம செயலாளர் குற்றச்சாட்டு

தேர்தல் பிரச்சார வேலைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காகவே தேசிய லொத்தர் சபையை சனாதிபதி சந்திரிகா சுவிகரித்துள்ளதாக ஐ.தே. கட்சியின் பிரதம செயலாளர் செனத் கப்புக் கொட்டுவ குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவர் அரச சொத்துக்கள் வாகனங்கள் இந்தப் பொதுத்தேர்தல் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டாம் என அறிவித்த சனாதிபதி தற்போது தேசிய லொத்தர் சபையை தன்வசம் ஆக்கியுள்ளார். லொத்தர் சபை நிதியையும், அதன்வாகனங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் தேர்தல் பிரச்சார வேலை களுக்கு பயன்படுத்தப்போவதை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம் எனவும் தெரிவித்தார். மேலும் மஹாபொல மாணவர்களுக்கு தேசிய லொத்தர் சபைநிதியிலிருந்து இலவசக்கல்வி பயில்வதற்கு உதவி வழங்கி வருவதையும் அவர் எடுத்துக்கூறியுள்ளார்.

# நெல்லின் கொள்விலை கி.கி. 15ரூபாவாக நிர்ணயிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் நெல்லின் விலையை ஒரு கிலோவிற்கு 15 ரூபா என அறிவித்துள்ளது.

விவசாய அமைச்சின் மேலதிக செயலாளர் சனசேன கெட்டி ஆராட்சி இது பற்றித் தெரிவிக்கையில் தற்போதைய காலபோக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கென திறைசேரி 166 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதாகக் கூறினார்.

இதேவேளையில் அரசிடம் இருந்து நெல்லை நேரடியாகக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளை கமநலசேவைத் திணைக்களமும் கூட்டுறவுச் சங்கங்களும் செய்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இல. சமாதான முயற்சியின் வெற்றிக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம்

## முன்னாள் அமெ.தூதுவர் திருமதி றெரசிஸ்ரா

(கொழும்பு)

**சிறிலங்காவில் இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதான முயற்சியின் வெற்றிக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்று சிறிலங்காவிற்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் தெரிவித்துள்ளார்.**

இந்தியா ஏற்றுக் கொள்ளாத தீர்வுத் திட்டத்தினால் சிறிலங்காவில் நிலையான சமாதானம் ஏற்படாது என்றும் தூதுவர் திருமதி ரிக்கராண்சிறெரசி எஸ்ரா வேஷ்வர் கூறினார்.

சிறிலங்காவில் இன நெருக்கடியிலிருந்து இந்தியா விவேகத்துடன் ஒதுங்கி இருக்கிறது என்றும் கூறிய அவர் இந்நிலையிலும் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிக்கு இந்தியா ஆதரவளித்து வருவது பாராட்டுக்குரியது என்றும்,

விடுதலைப் புலிகள் தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை முன்வைத்த வேளையில் சிறிலங்காவில் வேண்டுமென்றே அரசியல் நெருக்கடி உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த நெருக்கடி ஒரு விபத்து அல்ல என்றும் சபர் மேலும் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக புரையோடிப்போய் இருக்கும் அரசியல் நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதற்கு தற்போது கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பு பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளது.

இன நெருக்கடிக்கான தீர்வு சிறிலங்காவின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

# நோர்வேயின் சிலகாரியங்களில் நாம் திருப்தியடையவில்லை

## -அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தும் நிலை வந்தபோது நோர்வே சில காரியங்களைச் செய்திருந்தது. அவைகுறித்து நாம் திருப்தியடையவில்லையென சிறிலங்காவின் அமைச்சரும் சனாதிபதியின் ஆலோசகருமான லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே கதிர்காமர் இவ்வாறு கூறியுள்ளார்.

நாம் திருப்தியடையாத விடயங்கள் குறித்து நோர்வேக்குத் தெளிவுபடுத்துவோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் இல்லாது விட்டால் மீண்டும் போர் வெடித்துவிடும் என்று மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்தி வாக்கு வேட்டையில் இறங்கியுள்ளார். இது ஒரு மோசடியாகும் என்று பிரதமரைச் சாடியுள்ள அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கு எதிரணியினரையும் இணைத்தே விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த இருக்கிறோம்.

சமாதானப் பணியில் நோர்வே ஆற்றிவரும் பங்கில் பெரும் மாற்றங்களைச் செய்ய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திட்டமிடவில்லை என்று தெரிவித்தார்.

சனாதிபதி சமாதான நடவடிக்கைகளைத் தடுத்துவிட்டார் என்றும் யுத்தத்திற்கு வழிகோலிவிட்டார். என்றும் ஐக்கிய தேசிய முன்னணி குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் அதில் உண்மையில்லை. புலிகளுடனான பேச்சில் இணக்கப்பாட்டுக்கு வந்த விடயங்களை அரசு அமுல்ப்படுத்தாததாலும் ஐ.தே.முன்னணியின் சலனப் புத்தியாலுமே பேச்சு ஸ்தம்பித்தது.

ஆறு சுற்றுப் பேச்சுக்கள் வீண் காலவிரயம் என்று புலிகளின் தலைவர் தெரிவித்திருக்கின்றார். என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டும்.

இணக்கப்பாடு காணும் விடயத்தில் தாம் பிழை விட்டிருப்பதாக பிரதமரும் ஏற்றுக் கொண்டுள்ளார். சனாதிபதியோ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் சகல பிழைகளும் திருத்தப்படும்.

ஐ.தே. முன்னணிக்கு வாக்களியுங்கள், இல்லாவிட்டால் நாட்டில் யுத்தம் ஏற்படும் என்று பிரதமர் கூறுகின்றாரா? இது மக்களை அச்சுறுத்துவதாக அமையாதா? என்றும் அமைச்சர் கதிர்காமர் வினா எழுப்பியுள்ளார்.

### கூட்டம்

முல்லை.மாவட்டத்தில் துணுக்காய்,முல்லை கல்வி வலயங்களைச் சேர்ந்த அனைத்துப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்குமான நிரந்தர நியமனம் கோரல் தொடர்பானதும் மற்றும் 2004 ஆம் ஆண்டுக்காகத் தங்களது அங்கத்துவத்தைப் புதுப்பித்தல் தொடர்பாகவும், வேறும் தங்கள் நியமனம் தொடர்பாகச் சேவைக்காலம் மற்றும் பிரச்சினைகள் பற்றி ஆராய்வதற்குமான அவசர முக்கியமான கூட்டம் எதிர்வரும் 02-03-2004 செவ்வாய் மு.ப 10.30 மணியளவில் நடைபெறவுள்ளதால் மேற்படி கல்வி வலயங்களைச் சேர்ந்த அனைத்துப் பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இக்கலந்துரையாடலில் வ.கி.மாகாண பகுதிநேர ஆ.ஆ.சங்கத் தலைவர் மற்றும் மாவட்டப் பிரதிநிதிகளும் கலந்துகொள்கிறார்கள் என்பது குறிப்பிடதக்கது.

# பனங்கைப்பணி பயிற்சி நெறி

முல்லைத்தீவு மாவட்ட பனை அபிவிருத்திச் சபையும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முல்லை மாவட்ட செயலகமும் இணைந்து முல்லை மாவட்ட பெண்கள் அபி விருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் கைவேலியில் அமைந்திருக்கும் மலர் சோலை தாய்-சேய் நலன் காப்பகத்தில் 27.02.2004 வெள்ளிக்கிழமை 3.30 மணியளவில் பனங்கைப்பணி பயிற்சிநெறியின் ஆரம்பவிழா, முல்லைமாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுத் திட்ட இணைப்பாளர் தலைமையில் ஆரம்பமானது.

மாவட்ட பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர் திரு வி.தர்மகுலசிங்கம் அவர்களினதும் மாவட்டப் பொருண்மிய மேம்பாட்டு செயலர் திரு சி.அமிர்தலிங்கம் அவர்களினதும் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான, மேற்படி நிகழ்வின் வரவேற்புரையினை பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தின் நிர்வாக உறுப்பினர் திருமதி மகேஸ்வரி அவர்களும், ஆசிச் செய்தியினை மாவட்ட நிர்வாகசேவை துணைப் பொறுப்பாளர் திருமதி பொன்னிலா அவர்களும் சிறப்புரையினை முல்லைமாவட்ட அரசியல்துறைப பொறுப்பாளர் திரு.முகுந்தன் அவர்களும் ஆற்றினார்கள்.

தொடர்ந்து தமிழீழ பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுப் பணிப்பாளர் செல்வி சுதர்சினி, மாவட்டப் பனை அபிவிருத்திச் சபை இணைப்பாளர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்டச் செயலர், பயிற்சி ஆசிரியை திருமதி சி.நாகம்மா ஆகியோரின் உரைகளுடன் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பொருண்மிய செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்படுகின்றது. (26)

## -செம்மணி புதைகுழி குறித்து-

# சரியான தகவலை பெற்றுத்தராத ம.உ. ஆணைக்குழு மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி புதைகுழி விடயங்கள் தொடர்பாக கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் சரியான விபரங்களை பெற்றுத் தராமையைக் கண்டித்து அன்னையர் முன்னணியும், பாதுகாவலர் சங்கமும் இணைந்து மார்ச் மாதம் முதலாம் திகதி அதாவது நாளை போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

படையினரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி சிவகுமாரை பிணையில் விட்ட போது அனுராதபுரம் உயர் நீதிமன்றில் பிணை எடுத்தவர் பெயரையும் அந்த வழக்கில் இலக்கத்தையும் பெற்றுத் தரும்படி கோரியும் நடத்திய விசாரணைகள் எதனையும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் பெற்றுத் தராமையைக் கண்டித்தே மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இல்ல திறனாய்வுப் போட்டி

முல்லைத்தீவு வெட்டு வாய்க்கால் அதகபாடசாலை மைதானத்தில இடம்பெற்ற வருடாந்த இல்லத் திறனாய்வுப் போட்டியில் ஞானப்பிரகாசர் இல்லம் 325 புள்ளிகளைப்பெற்று முதலாமிடத்தினையும், 319 புள்ளிகளைப் பெற்று விபுலானந்தர் இல்லம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக்கொண்டன. (20)

# சுயநலம் மிக்க அரசியல்வாதிகள் கட்சியைப் பிளவுபடுத்த முற்படுகின்றனர்

## ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இறுதி நேரத்தில் கூட பிரிந்து சென்றவர்களை மீண்டும் கட்சியில் வந்து இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தேன். சுயநலத்திலேயே கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்ட இந்தக் கருமிகளுக்கு எதுவுமே ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தல் இவர்களுக்குத் தகுந்தபாடம் கற்றுக கொடுக்கும்.

இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் இக்கட்சியின் திகாமடுல்ல மாவட்ட தலைமை வேட்பாளரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் அம்பாறையில் பள்ளிவாசல் தொழுகையில் ஈடுபட்ட ஆதரவாளர்களிடையே பேசுகையில் கூறியுள்ளார்.

முஸ்லிம் காங்கிரசுக்கு வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஒரு பலமான தளம் இருக்கின்றது. இதுபோன்று ஏனைய பகுதிகளிலும் இக்கட்சி காலூன்றி வருவதைப் பொறுக்க முடியாத சுயநலம் கொண்டவர்களே இக்கட்சியை பிளவு படுத்தும் வகையில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நடவடிக்கைகளுக்கு எம்மோடு இருந்த சில அரசியல் வாதிகள் துணைபோய் இருப்பதுதான் எமக்கு மிகுந்த கவலையைத் தருகின்றது. இதற்கான பிரதிபலனை பொதுத் தேர்தலின் பின் கண்டு கொள்ளலாம்.

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பால் சமூகத்தின் விடுதலைக்காக உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரசை பாதுகாக்க வேண்டிய கடமையும் பொறுப்பும் தலைமைத்துவத்திற்குரியதாகும். எனது உயிரை பலி கொடுத்தாவது முஸ்லிம் காங்கிரசை பாதுகாப்பதற்கு நான் ஒரு போதும் பின் நிற்கப் போவதில்லை.

இலங்கை வாழ் முஸ்லிம்களின் இதயம் எனக் கருதப்படுகின்ற திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம்கள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் தேசியத் தலைவருக்கு இருக்கின்ற பலத்தை நிருபித்துக் காட்டுவார்கள் என அவர் மேலும் கூறியுள்ளார்.

# பா. உறுப்பினர் எண்ணிக்கைக்காக ஒன்றுபட வேண்டிய அவசியமில்லை

## - பேரியல் அஷ்ரப்

(கொழும்பு)

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்பால் ஆரம்பிக்கப்பட்ட சிறி.மு.காங்கிரஸ் ஆரம்பகால உறுப்பினர்கள் நாங்கள் தான். ஆனால் இன்று நாங்கள் அந்தக் கட்சியில் இல்லை. விரட்டிருக்கப்பட்டவர்களாக இருக்கிறோம்.

என்று நு.ஆ. கட்சியின் தலைவியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்டத்திற்கான முதன்மை வேட்பாளருமான திருமதி பேரியல் அஷ்ரப் கூறியுள்ளார்.

கட்சிகள் அனைத்தும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியது அவசியம். ஆனால் பாராளுமன்றத்தில் கூடுதலான உறுப்பினர்களைக் கொண்டிருப்பதற்காக ஒற்றுமைப்படுவது அரசியல் இலாபம் கருதிய செயற்பாடாகும். எனவே இத்தகைய ஒற்றுமை அவசியமற்றது. பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கைக்காக ஒற்றுமைப்பட வேண்டிய அவசியம் எமக்கில்லை என்றும் கூறிய அவர்,

4உறுப்பினர்களுடன் பாராளுமன்றத்திற்கு பிரவேசித்த தலைவர் அஷ்ரப் செய்த சேவைகள் அளப்பரியன.

ஆனால் 12 பாராளு. உறுப்பினர்களுடன் இன்று மக்களுக்காக என்ன செய்துள்ளார்கள்? எத்தனை பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்பதைப் பொறுத்து முஸ்லிம் மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை. முஸ்லிம்களது தேவைகளை யார் நிறை வேற்றுவார்கள் எப்படி நிறைவேற்றுவார்கள் என்பது தான் முக்கியம் என்று அவர் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

முத்து ஐயன்கட்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.(வ.து)ஒட்டுசுட்டான்.

**பதவி வெற்றிடம்**

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிக்கும் 18 வயதிற்கும், 45 வயதிற்கும் இடைப்பட்டவர்களிடம் இருந்து கோரப்படுகின்றது.

கூட்டுறவுப் பணியாளர்களிற்கு வயதெல்லை பொருந்தாது..

சம்பளக் குறியீட்டு எண்:- 201/13

சம்பளம் :- 4000-5550 / 75/10-80 /10

கல்வித்தகைமை:-

கூட்டுறவுப் பணியாளர் 14 வது சம்பளத் திட்டத்தில் இரண்டு வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பயிற்சி உயர்தர சித்தி.

அல்லது

க.பொ.த.உயர்தரத்தில் 03. பாடங்களில் சித்தி.

மேற்படி விண்ணப்பங்கள் யாவும் 15.03.2004 நண்பகல் 12 மணிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபால் மூலம் தலைவர் மு.ஐ.கட்டு பல நோ. கூ.சங்கம் ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி தொடர்பாகக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
மு.ஐ.கட்டு.பல நோ.கூ. சங்கம்.
(சி.7167)

# நாட்டிலுள்ள சர்.பாடசாலைகளுக்கு கல்வி அமைச்சு பொறுப்பல்ல

## பிராந்தியப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் செயற்படும் சர்வதேச பாடசாலைகளுக்கான பொறுப்புக்கள் எதனையும் தாம் கொண்டிருக்கவில்லை என்று சிறிலங்கா கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.கல்வி அமைச்சு இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், சர்வதேச பாடசாலைகளை கண்காணிக்கும் அதிகாரம் கல்வி அமைச்சிற்குக் கிடையாது என்று கல்வி அமைச்சின் பிராந்தியப் பணிப்பாளர் ஏ.எம்.ஏ.ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

இங்கு இயங்கும் சர்வதேசப்பாடசாலைகள் கொம்பனிகள் பதிவாளரிடம் தம்மைப் பதிவு செய்து செயற்படுகின்றன. கல்வித்துறையில் ஒரு ஒழுங்கான நடைமுறையை மேற்கொள்ள வேண்டுமானால் பாராளுமன்ற சட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டும் என ஜெயசிங்க சுட்டிக் காட்டியுள்ளார். அமைச்சு தனியார் பாடசாலைப் பிரிவு 1961ஆம் ஆண்டிற்கு முன்னர் அரசினால் அங்கீகரிக்கப்படாத பாடசாலைகள் மீது கவனம் செலுத்தி வருகிறதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை கேற்வே சர்வதேசப் பாடசாலைக்கு எதிராக செய்யப் பட்ட முறைப்பாட்டை அடுத்து முறைப்பாட்டாளரான சேப்பால எக்கநாயக்கவிற்கு ஆறுமில்லியன் ரூபா நஷ்டஈடாக வழங்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.


# மருத்துவக் கண்காட்சி

யாழ்ப்பாண மருத்துவ பீட வெள்ளிவிழா கொண்டாட்ட ஆரம்ப நிகழ்வாக 05.03.2004 தொடக்கம் 09.03.2004 வரை மருத்துவக் கண்காட்சி நடாத்தப்படுகிறது. இக் கண்காட்சியானது 05.03.2004 அன்று காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும். மறுநாட்களில் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி தினமும் இரவு 9.00 மணிவரை நடைபெறும்

**நுழைவுக்கட்டண விபரங்கள்: —**

மாணவர்களுக்கு:ரூ. 20.
மற்றவர்களுக்கு :ரூ. 30.

நுழைவுச் சீட்டுக்களுக்கான விற்பனைதினமும் மாலை 5.0 மணியுடன்நிறுத்தப்படும்

பள்ளி மாணவர்களுக்கான நுழைவுச்சீட்டுக்களை மருத்துவ பீட காரியாலயத்தில் முன்கூட்டியே பெற்றுக்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவபீட வெள்ளிவிழா அழைப்புக்குழு,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணம்.


அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுக்கப்பட்டது]

# கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல் – 2004

வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரும் அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டதும் 1998.05.19 ஆம் திகதி 1028/06 இலக்கங்கொண்ட அதிவிசேட வர்த்தகமானியில் வெளியிட்டதுமான வடக்கு-கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட ப.நோ.கூ.சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகளுக்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக்குழுத் தெரிவுக்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் பின்வரும்காலஅட்டவணையின் படி நடைபெறுவதற்கான ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கிளிநொச்சி அவர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திகதி:- 07.03.2004 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- மு.ப.9.30 மணி

| தொ.இல. | கிளை இல | கிளை | கிளைப் பொதுச்சபைக்கூட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 01 | 01 | ஸ்கந்தபுரம் | ஸ்கந்தபுரம் இல.01.அ.த.க. பாடசாலை |
| 02 | 02 | கோணாவில் | அக்கராயன் அ.த.க. பாடசாலை |
| 03 | 03 | யூனியன்குளம் | யூனியன்குளம் அ.த.க. பாடசாலை |
| 04 | 04 | அக்கராயன் குளம் | அக்கராயன் மகாவித்தியாலயம் |
| 05 | 05 | வன்னேரிக்குளம் | வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் |
| 06 | 06 | ஆனைவிழுந்தான் குளம் | ஆனைவிழுந்தான் அ.த.க. பாடசாலை |
| 07 | 07 | கண்ணகைபுரம் | கண்ணகைபுரம் அ.த.க. பாடசாலை |
| 08 | 08 | ஊற்றுப்புலம் | ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலை |
| 09 | 09 | ஸ்கந்தபுரம் மேற்கு | ஸ்கந்தபுரம் இல. 02 அ.த.க. பாடசாலை |

இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்திலும் பார்வையிட்டு கிளைக்குழுத் தேர்தலை நடாத்துவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கா.சுரேந்திரன்,
பொதுச்செயலாளர்,
அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
அக்கராயன்குளம்.

(சி-9403)

# கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்



**சண்முகநாதன் சதுமுகன்**
பிறப்பு:- 22.12.1983
இறப்பு:-27.02.2004



**இராமசாமி சிவசுப்பிரமணியம்**
பிறப்பு:- 14.04.1938
இறப்பு:-26.02.2004



**ரெங்கசாமி ஜெகதீஸ்வரன்**
பிறப்பு:- 29.09.1983
இறப்பு:-25.02.2004

நேற்றுவரை எம்முடன் உறவாடி
ஒன்றாக பேசிச்சிரித்து பணியாற்றிய
உத்தமரே
போரோய்ந்த பொழுதில்
உம் பூவுடல்கள்
விபத்து என்னும் பேரரக்கனுக்கு
பலியானதுவோ.

எமது பணியாளர்களான திரு. இ. சுப்பிரமணியம், செல்வன் ச. சதுமுகன், செல்வன் ரெ. ஜெகதீஸ்வரன் ஆகியவர்களின் குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்திக்காக கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர்,பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,ஆயப்பகுதி.

(சி-9406)

சிந்தனைக்கு



இலட்சியத்தில் ஒன்றுபட்டு உறுதி பூண்ட மக்களே வரலாற்றைப் படைப்பர்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 29 -02-2004

## மக்களுக்குப் புரியும்!

இலங்கை அரசியல் விவகாரங்களில் அனாவசியமாக தலையிடவேண்டாம் என சிறிலங்கா காபந்து அரசாங்கத்தின் ஊடகத்துறை அமைச்சரும்,சனாதிபதி சந்திரிகாவிற்கு மிக நெருக்கமானவருமான லக்ஷ்மன்கதிர்காமர் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரை எச்சரித்துள்ளார். அத்தோடு தானும் வெளிவிவகார அமைச்சராக இருந்தவர்தான் எனவும் அவர் பிரிட்டிஷ் அமைச்சருக்கு ஞாபகப்படுத்தியுள்ளார்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் மைக்சோஒபினான், "சமாதான முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில், அரசியல் கட்சிகளும், கட்சிகளின் ஆதரவாளர்களும் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடக்கூடாது" எனத் தெரிவித்தமை தொடர்பாகவே அமைச்சர் லக்ஷ்மன்கதிர்காமர் இக்கண்டனத்தையும், கண்டனம் தெரிவிப்பதற்கான தனது தகுதியையும் வெளியிட்டுள்ளார் எனலாம்.

பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சரின் இக்கூற்றுக்கள் இலங்கை உள்விவகாரங்களில் தலையீடு செய்வதாக உள்ளதா? இல்லையா? என்பது ஒருபுறம் இருக்க பிரிட்டிஷ் அமைச்சர் எக்கட்சியையுமோ, எவரையுமோ குறிப்பிடாது தமது அறிவுறுத்தல்களை வெளியிட்டிருக்கையில் லக்ஷ்மன்கதிர்காமர் மட்டும் ஏன் சீற்றத்தை வெளிப்படுத்த வேண்டும்? ஐ.தே.முன்னணி அரசாங்கம்இவ்விடயத்தில் எதுவும் கருத்து தெரிவிக்காத நிலையில் கதிர்காமரின் இச் சீற்றத்தின் காரணம் தான் என்ன?

அதாவது பிரிட்டிஷ் வெளிவிவகாரஅமைச்சர் சி. சுதந்திரக்கட்சி–ஜே.வி.பி கூட்டணிதான் தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுவதாகக் குற்றம் சாட்டி இருந்தாரா? அன்றி யாருடைய பெயரையாவது குறிப்பிட்டு தேர்தல் வன்முறையில் ஈடுபடுவதாக குற்றம் சாட்டி இருந்தாரா? அவ்வாறு இல்லாத நிலையில் கதிர்காமரின் இச் சீற்றம் ஆனாது "தொப்பி அளவாகவுள்ளது" போன்றல்லவா உள்ளது.

இதேவேளை இலங்கை மக்கள் பற்றி லக்ஷ்மன்கதிர்காமர் தெரிவித்துள்ள சில கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாகவே உள்ளன. அதாவது "இலங்கை மக்கள் அமைதி முயற்சிகளைக் குறைத்து மதிப்பிடத் தக்கவகையில் முட்டாள்களல்ல" என்ற கூற்றுக்கள் மேற்கூறப்பட்டதற்குப் பொருத்தப்பாடானதாகும்.

ஏனெனில் இதனை இலங்கை மக்கள் ஏற்கனவே நிருபணம் செய்துள்ளனர். அதாவது சமாதான முயற்சிகளுக்கு எதிராகச்செயற்பட்டவர்களுக்கு எதிராகப் பல தடவைகள் இலங்கை மக்கள் வாக்களித்துள்ளனர். ஆனால், சிறிலங்கா அரசியல் வாதிகள் தான் முட்டாள்கள் போன்று சமாதானத்திற்கெதிராக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

அதாவது சமாதானத்திற்கு ஆதரவளித்த மக்கள் கடந்த தேர்தல்களில் சமாதானத்திற்கு மாறான நிலைப்பாடு கொண்டவர்களை தண்டிக்கத் தவறவில்லை. இதன் விளைவே சமாதான விரோதிகளைத் தேர்தல்களில் தோற்கடித்துள்ளனர். ஆனால், லக்ஷ்மன் கதிர்காமரும் இதனை விளங்கிக் கொண்டுள்ளார் என்றே கூறலாம்.

"சில வேளைகளில் அரசியல் வாதிகள் முட்டாள்களாக இருக்கலாம். ஆனால் மக்கள் புத்திசாலிகள். அவர்கள் அரசியல் கட்சிகளுக்கு தமது சரியான தீர்ப்பை வழங்குவார்கள்" என்ற கதிர்காமரின் கூற்றுக்கள் மேற்கூறப்பட்டதை உணர்த்தும் ஒன்றே ஆகும். இதன் காரணமாகவே தற்பொழுது ஆட்சி அதிகாரத்திற்காக போட்டியிடும் இருபெரும் கூட்டணிகளாகப் பிரிந்துள்ள அரசியல் கட்சிகளும் சமாதானம் குறித்த அறிவிப்புக்களையே வெளியிட்டு வருகின்றன.

இதன் வெளிப்படையாகவே, தேர்தல் பிரச்சாரத்தை ஆரம்பித்த கடந்த வியாழக்கிழமை இவ்விரண்டு பிரதான கட்சிகளும் தாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கப் போவதாகவே மக்களுக்கு வாக்குறுதி அளித்துவருகின்றார். அதற்கும் மேலாக, விடுதலைப்புலிகளுடன் எந்த வித முன்நிபந்தனையும் விதிக்காது ஐக்கிய சுதந்திர முன்னணி பேச்சுவார்த்தைகள் நடத்தத் தயாராக இருப்பதாக லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்திருப்பது சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

இந் நிலையில் மக்களிடையே உள்ள முக்கிய கேள்வி சமாதானம் குறித்து யார் பேசுவது உண்மை என்பதே ஆகும். அதாவது, இரு முக்கிய தரப்பு குறித்தும் சரியானதொரு மதிப்பீட்டை எவ்வாறு செய்தல் என்பதே ஆகும் ஆனால், இது மக்களுக்குச் சிறிய குழப்பத்தை கொடுப்பதாக இருப்பினும், மக்கள் கடந்தகால நிகழ்வுகளை வைத்தே முடிவிற்கு வந்து விட முடியும்.

ஆகையினால், இம்முறையும் மக்கள் சமாதானத்தை ஆதரிக்கும் உண்மையான சக்திகளைத் தேர்ந்தெடுப்பார்கள் என்றே நம்பலாம். அதாவது அரசியல்வாதிகள் தங்களை முட்டாள்களாக்க மக்கள் அனுமதிக்க மாட்டார்கள் ஆகையினால் தான் லக்ஷ்மன் கதிர்காமர் மக்கள் குறித்து புகழ்பாடுகின்றார். அத்தோடு தங்களைச் சமாதானத்தின் ஆர்வலர்கள் எனக் காட்டிக் கொள்ள முற்பட்டுள்ளார். ஆனால், மக்கள் அரசியல் விழிப்பு பெற்றுள்ளமையால், அவர்கள் சமாதானத்தில் உண்மையில் அக்கறையுள்ளவர் களை இனங்கண்டு கொள்வார்கள்.

# தமிழ் ஊழியர் பற்றாக்குறையால் அ.அட்டைக்கான விண்ணப்பங்கள் தேக்கம்

## ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கை சேர்ந்தவர்களுக்கு கடந்த ஆறு மாத காலமாக ஆட்பதிவுத்திணைக்களத்தினால் அடையாள அட்டைகள் வழங்கப்படவில்லை என வடக்கு -கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கச்செயலாளர் வாமதேவன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுதொடர்பாக வடக்கு-கிழக்கு மாகாண கிராம உத்தியோகத்தர் சங்கம் ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளரை அவரது அலுவலகத்தில் சந்தித்தது.

இதன்போது தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் போதிய அளவில் இல்லாமையினாலும் இந்த தேக்கநிலை ஏற்பட்டிருப்பதாக ஆட்பதிவுத்திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்ட விண்ணப்பங்களை பரிசீலிக்கும் இருதமிழ் இளைஞர்கள் தங்கள் கடமைகளை சீராக செய்யாமையினால் கடந்த ஆறு மாதங்களாக அடையாள அட்டைகளை வழங்க முடியாமல் இருப்பதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க அடையாள அட்டை விண்ணப்பங்களைப் பெற்று பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கும் பணிகளைச் செய்யும் கிராம சேவகர்களுக்கு விண்ணப்பம் ஒன்றிற்கு 75 சதமும் வருடாந்தம் 100 ருபா கொடுப்பனவும் வழங்கப்படுவதாக ஆணையாளர் தெரிவித்த போது அந்தக் கொடுப்பனவுகள் இதுவரை தங்களுக்கு கிடைக்க வில்லையென வடக்கு கிழக்கு கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர்.

நீண்டகாலமாக இந்தக் கொடுப்பனவை வடக்கு கிழக்கு தவிர்ந்த ஏனைய கிராம சேவகர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

# சிறி.இல் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிக்கு சர்வதேச சமூகம் உதவவேண்டும்

## கொபி அனான் வேண்டுகோள்

(ஜெனீவா)

சிறிலங்காவில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்படும் உதவிகளை நிறுத்தி விடாது. தொடர்ந்து வழங்குமாறு சர்வதேச நாடுகளிடம் ஐ.நா செயலாளர் கொபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதனால் அரசுக்கும் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுக்களை இதன் மூலம் துரிதமாக ஆரம்பிக்க முடியும்.

சமாதான நடவடிக்கைக்காக நோர்வே ஆற்றிய பயன்மிகு சேவைகள் பாராட்டிற்குரியது.

இந்த நாடு சிறிலங்காவின் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்து கொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது அத்துடன் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் சேவையும் பாராட்டுக்குரியது என கொபி அனான் மேலும் கூறியுள்ளார்.

# 225 ஆசனங்களுக்காக ஆறாயிரம் பேர் போட்டி

(கொழும்பு)

நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலில் 225 ஆசனங்களுக்கு ஆறாயிரம் பேர் போட்டியிடவுள்ளனர் எனத்தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

மேற்படி தேர்தலுக்காக 10 ஆயிரத்தி 600 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதில் ஒருகோடியே 30 இலட்சம் மக்கள் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் கடமையில் ஓர் இலட்சம் உத்தியோகத்தர்கள் பணியாற்றவுள்ளனர்.

இந்தத்தேர்தலில் 196 பேர் வாக்களிப்பின் மூலமும் 29 பேர்தேசியப் பட்டியல் மூலமுமாகவும் மொத்தம் 225 பேர் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# பௌத்த பிக்குகளின் கோரிக்கை தேர்தல் ஆணையாளரால் நிராகரிப்பு

பொதுத்தேர்தல்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ள பௌத்த பிக்குமார்களுக்கு பௌத்த விகாரைகளில் வாக்குச் சாவடிகள் அமைத்துத் தருமாறு விடுத்த வேண்டுகோளை தேர்தல் திணைக்களம் முற்றாக நிராகரித்துள்ளது.

இம்முறை பொதுத்தேர்தலில் போட்டியிடுவதற்கு 290 பிக்குமார்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர். சாதாரண பொது மக்கள் வாக்களிக்கும் நிலையங்களிலேயே இவர்களையும் வாக்களிக்குமாறு தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

## 3ஆவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழா

# இறுதிப்போட்டிகளின் அடிப்படையில் சிறந்த வீரராகத் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

கரபந்துபெண் மொனிகா குமாரி (திருமலை),கரபந்து ஆண் T.S தவுகல (திருமலை), கபடி ஆண் சந்திரசேகரா(வவுனியா),கபடி பெண் த.சுஜா (மட்டு), வலைப்பந்தாட்டம் இ.நித்தியா (யாழ்),தாச்சி பெண் M.சுபாஜினி (யாழ்),தாச்சி ஆண் தா.ஜெயசீலன் (கிளிநொச்சி), துடுப்பாட்டம் ஆண் தனகாந்த் (யாழ்), துடுப்பாட்டம் (சகலதுறை) ஜனார்த்தனன் (யாழ்) உதைபந்தாட்டம் G.A.டெவின்சன் (மன்னார்)

இதேவேளை உதைபந்தாட்டத் தொடரின் சிறந்த கோல் காப்பாளராக கிளிநொச்சி அணி யைச் சேர்ந்த வசந்த்தீபன் தெரிவானார்.

# ஒருநாள் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது

(கொழும்பு)

சிறிலங்காவில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய சிறிலங்கா கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான ஒருநாள்ப்போட்டித் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத் தொடரின் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற 4ஆவது போட்டியில் அவுஸ்திரேலியா 40 ஓட்டங்களால் வெற்றிபெற்றதன் மூலம் தொடரைக் கைப்பற்றியது. இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 43.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 233 ஓட்டங்களுக்குள் கருண்டது.

அதன்படி 234 ஓட்டங்கள் என்றஇலகுவான வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா ஒரு கட்டத்தில் 143 ஓட்டங்களுக்கு 2 விக்கெட் என்ற நிலையிலிருந்தது.

எனினும் இறுதி நேரத்தில் 15 பவுண்ரிகளுட்பட 101 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறப்பாக ஆடிய சிறிலங்காவின் குமார் சங்கக்கார ஆட்டமிழந்ததும் அணியின் வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் 193 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சிறிலங்கா அணி ஆட்டமிழந்தது.

அதேவேளை கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற போட்டியிலும் அவுஸ்திரேலியா 5விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.




## கோட்ட மட்ட உடற்பயிற்சிப்போட்டி

கரைதுறைப்பற்று கோட்ட பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சி கண்காட்சிப்போட்டி கடந்த 24-02-2004 அன்று முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் மகாவித்தியாலய உப அதிபர் திரு. ஆ.குணநேசன் தலைமையில் நடைபெற்றது.

இதில் 6பாடசாலைகள் பங்கு கொண்ட ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், இரண்டாம் இடத்தை வற்றாப்பளை மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை தண்ணீரூற்று இந்து வித்தியாலயமும், பெண்கள் அணியில் 8 பாடசாலை கள் பங்கு கொண்டன. இதில் முத லாவது இடத்தை வித்தியானந்தாக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், மூன்றாம் இடத்தை தண்ணீரூற்று இந்துவித்தியாலயமும் பெற்றுக்கொண்டன. (20)



வவுனியா நலன்புரி நிலையத் தீவிபத்தில் எரிந்துள்ள குடியிருப்புகளையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களையும் மேலுள்ள படங்களில் காணலாம்.

# பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் தீவிபத்து 115 குடும்பங்கள் நிர்க்கதிநிலை

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தில் நேற்று நண்பகல் பாரிய தீ விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளது. இதில் இடம்பெயர்ந்தோர் வசித்துவந்த பல வீடுகள் எரிந்துள்ளன.

பூந்தோட்டம் நலன்புரி நிலையத்தின் 6ஆம் யூனிற் பகுதியில் இன்று நண்பகல் ஏற்பட்ட பாரிய தீ விபத்தினால் 115 குடும்பங்களின் வீடுகள் முற்றாக எரிந்து நாசமாகி உள்ளன. இத் தீ விபத்தினால் அவ்வீடுகளில் வசித்த 445பேர் நிர்க்கதிக்குள்ளாகி உள்ளனர்.

இத் தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணம் சரியாகத் தெரியவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வசித்து வந்த மக்களில் யுத்த நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தவர்களே இந்நலன்புரி நிலையத்தில்வசித்துவந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (10)

# இல.அரசியல் நெருக்கடி விபத்தல்ல; வேண்டுமென்றே உருவாக்கப்பட்டது

## அமெ.இராஜதந்திரி ரெரசிஸ்ரா சொவ்·.·பர்

விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கு தன்னாட்சி அதிகாரங்களுக்கான யோசனைகளை முன்வைத்த வேளையில் இலங்கையில் வேண்டுமென்றே அரசியல் நெருக்கடி உருவாக்கப்பட்டது. இந்தநெருக்கடி ஒரு விபத்து அல்ல என அமெரிக்க இராஜதந்திரியான ரெரசிஸ்ரா சொவ்·.·பர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் முன்னர் பணியாற்றிய அமெரிக்கத் தூதரான இவர் மேலும் தெரிவிக்கையில;

இலங்கையின் இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதான முயற்சியின் வெற்றிக்கு இந்தியாவின் பங்களிப்பு அவசியம் என்றும் இந்தியா ஏற்றுக்கொள்ளாத தீர்வுத் திட்டத்தினால் இலங்கையில் நிலையான சமாதானம் ஏற்படாது என்றும் கூறினார்.

இலங்கையில் இனநெருக்கடி விவகாரத்தில் இந்தியா விவேகத்துடன் ஒதுங்கியிருக்கிறது என்றும் கூறிய அமெரிக்க ராஜதந்திரி இந்த நிலையிலும் நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும சமாதான முயற்சிக்கு இந்தியா ஆதரவளித்து வருவது பாராட்டுக்குரியது என்றும் விடுதலைப் புலிகள் வடக்கு, கிழக்கு தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை முன்வைத்த வேளையில் இலங்கையில் வேண்டுமென்றே அரசியல் நெருக்கடி உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் இந்த நெருக்கடி ஒரு விபத்து அல்ல என்றும் ரெரசிஸ்ரா சொவ்·.·பர் இவ்வாறு தெரிவித்தார்.

பல ஆண்டுகளாக புரையோடிப் போயிருக்கும் இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு தற்போது கிடைத்திருக்கும் அரியவாய்ப்பு பிரதமருக்கும் சனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியினால் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவது மிகவும் வேதனைக்குரியது என்றும் அமெரிக்க ராஜதந்திரி புதுடில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

இனநெருக்கடிக்கான தீர்வே இலங்கையின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் என்றும் ரெரசிஸ்ரா சொவ்·.·பர் தமதுரையில் சுட்டிக்காட்டினார்.

### இந்திய...

யாளங்கண்டுள்ளனர். இதையடுத்து இன்பருட்டி மீனவ சங்கத்திற்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து மீன்பிடிப் படகுகளில் அப்பகுதிக்கு விரைந்து சென்ற மீனவர்கள் சடலத்தை மீட்டு வந்துள்ளனர்.

தலைப்பகுதி கடும் சேதமடைந்த நிலையில் உடற்பகுதிகளில் எங்கும் வெட்டுக்காயங்களுடன் காணப்பட்ட சடலத்தை இறுதியாக அணிந்திருந்த உடைகள் மூலம் அடையாளங் காட்டி அது கொல்லப்பட்ட இரத்தினம் சிவானந்தனினது என குடும்பத்தவர்கள் அடையாளம் காட்டினர். இதனையடுத்து நேற்றிரவு 7மணியளவில் குறித்த மீனவரது சடலம் பொலிசாரால் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (27,33)

### போட்டி...

பயன்படுத்துவதாகத் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் ஆட்சேபம் தெரிவித்திருந்தார். அதில் வீடு சின்னத்தை தமிழ்க் கூட்டமைப்பினர் பயன்படுத்துவதை தடை செய்யுமாறும் தமிழ்க் கூட்டமைப்பின் தேர்தல் மனுவைத் தள்ளுபடி செய்யும் படியும் கே. சின்னத்துரை கேட்டிருந்தார். எனினும் இதனை சிறிலங்காவின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்கா நிராகரித்துள்ளார்.

### பிரதிச்...

வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிறிஸ்ரீனா றொக்கா சிறிலங்கா சனாதிபதிக்கு நிகராகப் பேசக் கூடிய ஒருவர் அல்ல எனவும் அதனாலேயே அவருடைய தொடர்பை ரத்து செய்ததாகவும் சனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொடர்பு கொண்ட கிறிஸ்ரீனா றொக்கா இது தொடர்பாக நீண்ட நேரம் உரையாடி யதாகத் தெரிவிக்கப்படுகிறது. (32)

### தமிழ்...

தேசத்தையும் இணைக்கமுடியும். இலங்கைப் பிரச்சினையில் அமைதித்தீர்வு ஏற்பட இந்தியா உதவ முடியும் தமிழ் மக்களுக்கு திருப்திகரமான தீர்வு கிடைத்தாலொழிய இலங்கை அமைதியுடனும் உறுதிப்பாட்டுடனும் இருக்கமுடியாது.

அமைதி முயற்சியில் ஈடுபட விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து கருத்திற் கொள்ள வேண்டும். இது விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தக் கூடிய சூழலை உருவாக்கும்.

இந்தியா இப்போதும் எப்போதும் எங்களுக்கு அருகாமையில் உள்ள பெரிய தேசம் . அதற்கென தார்மீக பொறுப்புக்கள் உண்டு. இரு தேசங்களுக்கும் இடையே இழந்து போன உறவைப் புதுப்பிக்க தமிழீழ மறு சீரமைப்பில் இந்தியா பங்கேற்க வேண்டும். அதேநேரத்தில் மீளவும் இலங்கைத்தீவில் இந்தியாவின் ராணுவத் தலையீட்டை உருவாக்க, ஈழத்தமிழர்களை அழிக்க சிங்கள அரசியல் வாதிகள் மேற்கொண்டு வரும் நடவடிக்கையையும் நாம் இந்திய அரசுக்கு சுட்டிக் காட்டுகின்றோம்.

கடந்துபோன நிகழ்வுகளையெல்லாம் நாம்கீறிப்பார்க்க விரும்பவில்லை அவற்றை கீறிப்பார்த்துக் கொண்டிருந்தால் புதியதான உறவுகள் தடைப்பட்டுக் கொண்டே இருக்கும். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துடனும் அதன் தலைமையுடனும் எமது மக்கள் இணைந்து நிற்கின்றனர். அதனை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்து எம்முடன் பேச்சுக்களை நடத்துகின்றது. இந்த உண்மையை இந்தியா உணர்ந்து கொள்ளவேண்டும்.

இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் தமிழீழ மீனவர்களுக்கும் இடையே இருந்து நல்லுறவை அழித்துவிட்டு தற்போது மோதலை அதிகரிப்பதில் சிறிலங்கா கடற்படை தீவிரம் காட்டி வருகின்றது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்திய அரசுடன் கடல் வளங்களைப் பகிர்ந்து கொள்வதில் தயாராக இருக்கிறது.

தமிழீழத்தில் இடைக்கால அரசு உருவாகும் நிலையில் தமிழ் நாட்டு மீனவர்களுடன் எமது அரசு இது தொடர்பான பேச்சுக்களை நடத்தும் இடைக்கால நிர்வாகம் அமைத்த பின்னர் ஐந்து ஆண்டுகள் கழித்து தேர்தல் நடத்தப்படும் ஏனெனில் கடந்த இரு தசாப்தங்களாக சிதைந்துபோயுள்ள மக்களின் அடிப்படை வாழ்க்கையை மீளச் சீரமைப்பதற்கான காலம் அது. அந்த சிக்கல்கள் தீர்க்கப்படுமானால் சனநாயக மற்றும் தனிநபர் உரிமைகளை சர்வதேச சமூக வரையறையின் கீழ் சந்திக்க தயாராக இருக்கின்றோம். விடுதலைப்புலிகள் இயக்கம் சிறிலங்காவின் அரசியல் சாசனத்தை ஏற்கவில்லை. அது ஒற்றை தேசத்தை வலியுறுத்தும் சாசனம். கூட்டரசை ஏற்காத சாசனம். அதனால்தான் எதிர்வரும் தேர்தலில் எமது இயக்கம் பங்கேற்கவில்லை. அத்துடன் சிறிலங்கா நாடாளுமன்றமானது எமது தமிழ் மக்கள் இழந்த உரிமைகளை மீட்டுத் தரும் என நாம் எண்ணவில்லை என்றும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் இந்துஸ்தான் ரைம்ஸுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

## அனைத்துலக பெண்கள் தினம்

# விளையாட்டுப் போட்டி இன்று வவுனியாவில் ஆரம்பம்

அனைத்துலக பெண்கள் தினத்தை முன்னிட்டு அரசியல்துறை மகளிர் பிரிவினரால் நடத்தப்படும் பெண்களுக்கான விளையாட்டுப் போட்டி வவுனியா நகர சபை மைதானத்தில் இன்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

விளையாட்டுத்துறையின் ஆதரவுடன் இன்றும் நாளையும் நடத்தப்படும் இவ் விளையாட்டு நிகழ்வுகளில் இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதமவிருந்தினராக வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி பீடாதிபதி க. பேனாட்டும், நாளைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக வவுனியா வடக்கு கல்விப் பணிப்பாளர் திருமதி ஒஸ்வேல்ட்டும் கலந்து கொள்கின்றனர்.

# முகமாலையிலும், ஓமந்தையிலும் மேலதிக சோதனைச் சாவடிகள்!

## இராணுவப் பேச்சாளர் சுமேதபெரேரா

எதிர்வரும் தேர்தலில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்பை வழங்கும் பொருட்டு முகமாலையிலும், ஓமந்தையிலும் மேலதிக சோதனைச் சாவடிகள் அமைக்கப்படவுள்ளன.

இந்தத்தகவலை இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேதபெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தப்பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகளின் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு உரிய வாய்ப்பு கிடைக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் எத்தகைய சோதனைச் சாவடிகள் அமைக்கப்படும் என்ற தகவலை அவர் தெரிவிக்கவில்லை. (32)

# இத்தாலி செல்ல முயன்ற 10 தமிழ் இளைஞர் கைது

நீர் கொழும்பில் இருந்து இந்தாலிக்கு செல்லமுயன்ற 10 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர்கள் அனைவரும் வவுனியாவைச் சேர்ந்த தமிழராவர். எனினும் இவர்களின் பயணத்துக்கு சிங்கள வர்த்தகர் ஒருவரே ஏற்பாடுகளை செய்திருந்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இவர்களின் பயணங்களிற்காக தலா நான்கு இலட்சம் ரூபா பெறப்பட்டிருந்ததாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (32)

# சமூக முன்னேற்றக் கழக ஆண்டு நிறைவு விழா

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 22வது ஆண்டு நிறைவை முன்னிட்டு பரிசளிப்பு - பாராட்டு விழா இன்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

காலை அரங்கம் மாலை அரங்கமென இரு வேளைகளாக இடம்பெறும் நிகழ்வுகளில் சிறப்புரைகள்,கலை நிகழ்வுகள் மற்றும் மாணவர்களுக்கான பரிசளிப்பு என்பவை இடம்பெறவுள்ளன. (27)

# பிரதம கட்சி வேட்பாளருக்கு குண்டு துளைக்காத வாகனம்!

வடகிழக்கில் போட்டியிடும் பிரதான கட்சி வேட்பாளர்களுக்கு குண்டு துளைக்காத வாகனங்களும் உடைகளும் தேர்தல் பிரச்சாரங்களுக்கு வழங்க இருப்பதாக பாதுகாப்பு பகுதியினர் கூறியுள்ளனர். அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பாதுகாப்பு பகுதிக்கு அறிவித்த பின்பே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

### திருமலையில்....

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மூதூர் கிழக்கு பிரதேச எல்லைப்புற கட்டைப்பறிச்சான் இராணுவ முகாம் அருகே உள்ள சூனியப்பிரதேசத்திலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள ஈச்சிலம்பற்றைப்பகுதி தமிழ் வாக்காளர்களுக்காக மஹிந்தபுர இராணுவ முகாமுக்குள் அண்மித்ததாக உள்ளசூனியப் பிரதேசத்திலும் அமையலாம் என்றும் அரச அதிபர் காமினி ரொட்ரிக்கோ தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் தமிழ் வாக்காளர்கள் கொத்தனி வாக்களிப்பு நிலையங்களுக்கு சிரமமின்றி வந்து வாக்களிப்பதற்காக போதிய போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும் என்றும் அரசாங்க அதிபர் காமினி ரொட்ரிக்கோ தெரிவித்தார். (25)

### வாக்களிப்பது....

அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இவைகள் யுத்தநிறுத்த உடன்பாட்டுடன் சம்பந்தப்பட்டவையாகும்.

படைத்தரப்புடனும் விடுதலைப் புலிகள் தரப்புடனும் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றமையின் காரணமாக இவற்றில் கண்காணிப்புக்குழுவும் சில நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டும் என்பது குறித்து அவர்களுக்கு விளங்கப் படுத்தியுள்ளோம்.

அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளை, எங்களுடைய நிலைப்பாடுகளை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அவற்றினை சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேசி இதற்கான முடிவுகளை விரைவில் அறிவிப்பதாக உறுதியளித்துள்ளனர் என்றார்.

மேற்படி பேச்சுவார்த்தை அரசியல்துறை நடுவப்பணியகத்தில். நேற்றுப்பகல் 11.00மணி முதல் 12.00மணிவரை நடைபெற்றது.

விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சார்பில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரொண்ட் புறாவ் ஹொவ் டே குழுவினரும் கலந்து கொண்டனர்.

முன்னதாக நேற்றுக்காலை 9.45மணிக்கு உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சி விளையாட்டு மைதானத்திற்கு வந்திறங்கிய கண்காணிப்புக்குழுத் தலைவரையும் குழுவினரையும் அரசியல் துறைத்துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் வரவேற்று அரசியல் துறை நடுவப்பணியகத்திற்கு அழைத்துச்சென்றார். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.